*World Christian Fellowship*
www.wcflondon.com
wcflondon@gmail.com

# கலாத்தியர்

## பாடம் 20 பரிசுத்த ஆவியானவர் பாகம் 04
## உங்களுக்குள் ஆவியானவர் செய்யும் கிரியைகள்

***கலாத்தியர் 3:1-3, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. 2. ஒன்றை மாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? 3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?***

*பரிசுத்த ஆவியானவர் ஒரு நபரை மீண்டும் பிறக்க வைக்கும் போது கீழ்கண்டவற்றை நடைபெறும்.*

- ✓ *அவர் பாவத்தை கண்டிக்கிறார்,*
- ✓ *அவர் இருதயத்தை மனம் திரும்புதலுக்கு நடத்துகிறார். அதாவது பாவத்திலிருந்து தேவனிடம் திருப்புகிறார்,*
- ✓ *சுவிசேஷ பிரசங்கத்தை கேட்டு மற்றும்*
- ✓ *அது இதயத்தை மீண்டும் பிறக்க வைக்கிறது.*

*ஒருவர் மீண்டும் பிறக்கும் போது, கீழ்கண்டவைகள் நடைபெறுவதை காணலாம்.*

1. *பரிசுத்த ஆவியானவர் உள்ளே வாசம் செய்வது*
2. *பரிசுத்த ஆவியானவர் செய்யும் ஞானஸ்நானம்*
3. *பரிசுத்த ஆவியானவர் தரும் வரங்கள்*
4. *பரிசுத்த ஆவியானவரின் நிச்சயம்*
5. *பாவம் மற்றும் மரணத்தினின்று உங்களை பிரிப்பது*

## *1. பரிசுத்த ஆவியானவர் உள்ளே வாசம் செய்வது*

*நீங்கள் இரட்சிக்கப்பட்ட அக்கணமே பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்து வாசம் செய்ய துவங்குகிறார். ஒரு நபர் இரட்சிக்கப்பட்ட உடனே தேவ ஆவியானவர் உள்ளே வந்து அவர் இருதயத்தில் வாசம் செய்கிறார்.*

***யோவான் 14:17, உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.***

***1 யோவான் 4:12-14, தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். 13. அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.14. பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்.***

*ஒரு நபர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட அக்கணமே பரிசுத்த ஆவியானவரின் வாசம் செய்தல்*

*நடைபெறுகிறது. பிறகு அவர் அந்த விசுவாசியின் வாழ்க்கையில் கிரியைகளை செய்ய துவங்குகிறார்.*

*1 கொரிந்தியர் 12:13,* ***நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.***

*நாம் ஆவியானவரை பருகினோம்.*
***ரோமர் 8:9,*** ***தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட் பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல.***

*நீங்கள் உங்களுக்குள் கிறிஸ்துவின் ஆவியை பெற்று இருக்கிறீர்கள்!*

*உங்களை கண்டித்த, உங்களை மனம் திரும்புதலுக்கு நேராய் வழிநடத்திய, உங்களுக்கு தந்த வாழ்க்கையை புத்துயிர் பெற செய்த அவரை நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் அதனால் நீங்கள் மீண்டும் பிறந்தீர்கள். எனவே அவர் உங்களுக்குள் வாசம் செய்கிறார்.*

*1 கொரிந்தியர் 6:19-20,* ***உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? 20. கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.***

*உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது.*

## *2. பரிசுத்த ஆவியானவர் செய்யும் ஞானஸ்நானம்*

*வேதம் சொல்லுகிறது நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்றீர்கள் அல்லது அவருக்குள் முக்கி எடுக்கப்பட்டீர்கள் என்று.*

*1 கொரிந்தியர் 12:11-13,* ***இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்துகொடுக்கிறார். 12. எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். 13. நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.***.

*பவுல் இங்கு ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் மூலம், ஆவியானவர் நம்மை இயேசு கிறிஸ்து மற்றும் அவரின் சரீரத்தோடு இணைக்கிறது.*

*நீங்கள் இரட்சிக்கப்பட்ட போது, உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த கிறிஸ்து உங்களை அவரின் சரீரமாகிய சபைக்குள் உங்களை சேர்த்துவிட்டார் அல்லது உள்ளே முங்கி எடுத்துவிட்டார்.*

*எனவே நீங்கள் தேவ ஆவியானவரால் உயிருள்ள சபைக்குள் சேர்க்கப்பட்டு, ஒரு அங்கமாக உள்ளீர்கள். ஆவியானவரை பிரதிநிதியாக கொண்டு நீங்கள் சபைக்குள் முங்கி எடுக்கப்படீர்கள், சேர்க்கப்பட்டிர்கள்.*

### *3. பரிசுத்த ஆவியானவர் தரும் வரங்கள்*

*பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வரங்களை தருகிறார்!*

***அப்போஸ்தலர் 2:38-39, பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். 39. வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி.*** *"*

***1 கொரிந்தியர் 12:4-7, வரங்களில் வித்தியாசங்கள் உண்டு ஆவியானவர் ஒருவரே. 5. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. 6. கிரியைகளிலேயும் வித்தியாசங் களுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. 7. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப் பட்டிருக்கிறது***.

*கிறிஸ்துவின் சரீரத்திற்கு பணி செய்யும் படி உங்களுக்கு அவர் தெய்வீக அன்பளிப்பை தருகிறார். நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக இருந்து, அந்த சரீரத்திற்கு பணி செய்ய வரங்களை கொடுக்கிறார்.*

*அந்த வரம்*

- ✓ *போதகம் அல்லது உபதேசம்,*
- ✓ *நிர்வகிப்பது,*
- ✓ *விசுவாசம்,*
- ✓ *ஜெபம்,*
- ✓ *உதவி செய்வது,*
- ✓ *ஆட்சி செய்வது,*
- ✓ *வித்தியாசமான வரங்கள் மற்றும்*
- ✓ *இவை எல்லாம் சேர்த்தும் கூட இருக்கலாம்.*

*ஒவ்வொருவரும் தனிப்பட்ட வகையில் தனித்துவம் வாய்ந்தவர்கள், அதன் மூலம் நாம் ஒருவொருக்கொருவர் உதவியாய் இருக்க முடியும்.*

*ஆனால் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வரங்களை பரிசளிக்கிறார்.*
*வரங்கள் வெளி உலக பயன்பாட்டிற்காக கொடுக்கப்படவில்லை, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கிரியைகள் நடப்பிக்கவே அவைகள் கொடுக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு வரங்கள் கொடுக்கப்பட்டதனால் ஆவியானவர் உங்கள் வரங்கள் மூலமாய் சரீரமாகிய சபைக்கு ஊழியம் செய்கிறார். நீங்கள் ஆவியின் வரங்களை பெற்றுள்ளீர்கள்!*

### *4. பரிசுத்த ஆவியானவரின் நிச்சயம்*

***எபேசியர் 1:13-14, நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். 14. அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப்***

***புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்.***

*முற்றிலும் அளிக்கப்பட்ட அல்லது நிச்சயம்.*
*நீங்கள் இரட்சிக்கப்பட்ட போது, பரிசுத்த ஆவியானவர் உங்களை முத்திரைபோட்டுள்ளார்.*

***“உங்களை முத்திரைபோட்டுள்ளார்” என்பதின் அர்த்தம் என்ன?***
*முத்திரை என்பது நம்பகத்தன்மையை குறிக்கிறது.*
*முத்திரை என்பது அதே நேரம் முறிக்கப்படாத வாக்குத்தத்தை குறிக்கிறது.*

*எனவே நீங்கள் ஆவியானவரால் தேவனுடைய பிள்ளை என்ற அங்கீகாரத்தை பெற்று முத்திரைபோடப்பட்டு இருக்கிறீர்கள், அது உடைக்கமுடியாத உறுதிமொழியாகும்.*

*பரிசுத்த ஆவியானவர் உங்களை நித்தியத்திற்காக பாதுகாக்கிறார். உங்களுடைய நித்திய மகிமையை காக்கிறார். நீங்கள் இரட்சிக்கப்பட்ட அக்கணமே உங்களுடைய நித்திய மகிமைக்காக தேவன் செலுத்தும் முழு கிரயமாக பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு தந்து இருக்கிறார்.*

*அரபின்* ***‘arrabn’*** *என்ற வார்த்தைக்கு ‘‘நிச்சயதார்த்த மோதிரம்’’ என்று அர்த்தம்.*

*நீங்கள் இயேசு கிறிஸ்துவை முக முகமாய் காணும்போது, அவரை இறுதியாக கல்யாணத்தில் சந்திக்கும் போது அதற்கு பரிசுத்த ஆவியானவரே நிச்சயதார்த்த மோதிரமாய் உள்ளார்.*

*எபேசியர் 1:14,* ஐ பொறுத்தவரை பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஒரு நித்திய பரம்பரை சொத்தாக, ஒரு உறுதியோடு கொடுக்கப்பட்டுள்ளார்.

## *5. பாவம் மற்றும் மரணத்தினின்று உங்களை பிரிப்பது*

*நீங்கள் இரட்சிக்கப்பட்டபோதே பரிசுத்த ஆவியானவர் செய்யும் இன்னொரு காரியம் பாவம் மற்றும் மரணத்தினின்று உங்களை பிரிப்பது. உங்களை பாவத்தின் ஆளுகை மற்றும் நித்திய மரணத்தினின்று உங்களை பிரித்து எடுத்துவிட்டார்.*

***2 தெசலோனிக்கேயர் 2:13, கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்,***

*பரிசுத்த ஆவியின் மூலம்,*

- ✓ *நாம் பாவத்திலிருந்து விலக்கப்பட்டோம்,*
- ✓ *நாம் மரணத்திலிருந்து விலக்கப்பட்டோம் மற்றும்*
- ✓ *பாவத்தின் விளைவுகளிலிருந்து விலக்கப்பட்டோம்,*

*இது ஒரு நிலை சுத்திகரித்தல்.*

*அந்த படிநிலைகளை மீண்டும் ஒரு முறை காண்போம்!*

- ✓ *பாவத்தை குறித்து கண்டிக்கப்படுதல்,*
- ✓ *மனந்திரும்புதல்,*

- ✓ *தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தோடு கேட்பது,*
- ✓ *மீண்டும் பிறப்பது,*
- ✓ *பாவம் மற்றும் மரணத்திலுருந்து பிரித்தெடுக்கப்படுவது*
- ✓ *பரிசுத்த ஆவியானவர் உள்ளே வாசம் செய்வது*
- ✓ *கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக சேர்க்கப்படுவது*
- ✓ *தேவனுடைய சரீரத்திற்கு ஊழியம் செய்ய வரங்கள் கொடுக்கப்படுவது*
- ✓ *பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு நித்திய பரம்பரை சொத்தாக அருளப்படுவது.*

*இந்த வரிசையில் தான் நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை துவங்க வேண்டும்.*

*ஒரு முறை இவைகள் நடந்துவிட்டால் அடுத்து தேவனோடு நெருங்கி வாழும் ஒரு உன்னதமான பாக்கியம் நமக்கு கிடைக்கிறது. அதை தேவனுடன் நெருக்கமாக இருப்பது என்று கூறலாம்!*

## தேவனுடன் நெருக்கமாக இருப்பது

*பரிசுத்த ஆவியானவர் நம்மை தேவனுடைய நெருங்கிய உறவுக்குள் கொண்டு செல்கிறார். பரிசுத்த ஆவியானவர் நாம் தேவனோடு எப்போதும் தொடர்பு கொள்ளும் பாக்கியத்தை தருகிறார், அது எப்போதும் இசைந்து வாழும் ஒரு தொடர்பு ஆகும்.*

*தேவன் தான் நமக்கு வேண்டிய எல்லாவற்றின் ஆவிக்குரிய மூலாதனம், அவர் மூலம் தான் எல்லா ஆவிக்குரிய தேவைகளும் நமக்கு கிடைக்கும்.*

*இந்த மனித வாழ்க்கையை வாழும் நாமெல்லோரும் ஆவிக்குரியவர்கள். இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்கிறோம், அந்த ஆவிக்குரிய சந்தோஷம் மற்றும் இன்பத்தை நாம் இயற்கையாக பெற முடிவது. நாம் ஆவிக்குரிய திருப்தி மட்டும் தான் அடைய முடியும் அதுவும் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரால் தான் அடைய முடியும்.*

***கலாத்தியர் 4:5-6, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.6. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்!"***

*தேவன் நம்மை அவருடைய பிள்ளையாக தத்தெடுத்துள்ளார், அவர் பிள்ளைகளாக மாற்றியுள்ளார்.*

*தேவன் அவருடைய பரிசுத்த ஆவியானவரை அனுப்பி*

- ✓ *முத்தரித்தார்,*
- ✓ *உறுதியளித்தார்,*
- ✓ *முழு கிரயமும் செலுத்தினார்,*
- ✓ *நிச்சயதார்த்த மோதிரமாக உள்ளார்,*
- ✓ *நித்திய பரம்பரை சொத்திற்கு முதல் தவணையை செலுத்தினார்.*

***கலாத்தியர் 4:7, ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்.***

*ஆவியை பெற்றுக்கொண்ட நீங்கள் இனி அடிமைகள் அல்ல புத்திரராய் இருக்கிறீர்கள்.*

***கலாத்தியர் 4:9, இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?***

*பவுல் இவை எல்லாவற்றிலும் நீங்கள் தேவனுடைய புத்திரர் என்று சொல்லுகிறார். அந்த புத்திரசுவிகாரம் நீங்கள் தேவனை சுலபமாக தொடர்பு கொள்ளவும், அவருடன் நெருங்கிய தொடர்புக்கும் வழிவகுக்கிறது.* ***வ*** *6,*

*அதன் விளைவாக நாம் அவரை நோக்கி அப்பா பிதாவே என்று கூப்பிடுகிறோம்!*
*அரபி மொழியில் சுருக்கமாக "அபா "என்று கூறலாம்.* **"Abba"** *அதை எழுத்துரீதியாக நமது மொழியில் "அப்பா, டாடி" என்று கருதப்படும், குழந்தைகள் சில நேரம்" டாடா "என்று அழைக்கும்.*

*இது ஒரு அன்பான சொல்.*
*இது புத்திர உரிமை மற்றும் சலுகை உள்ளவர்கள் மட்டுமே உரிமையாக கூப்பிட கூடிய பதம் இது.*
*இது நெருக்கத்தை குறிக்கிறது.*
*இது குடும்பத்தை குறிக்கிறது.*
*இது அணுகலைக் குறிக்கிறது.*

*இது அன்பைக் குறிக்கிறது.*
*இது அணுகக்கூடிய தன்மையைக் குறிக்கிறது.*

*இது எபிரேய எழுத்தாளர்கள் எழுதும் போது எதை மனதில் வைத்தார்களோ அதை குறிக்கிறது "**தைரியமாய் அவரிடத்தில் போய்ச்சேரக்கடவோம்**."*

***ரோமர் 8:14-15, மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். 15. அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்."***

*நாம் தேவனுக்கு பயப்படவில்லை*
*தேவனை சேர ஏதோ ஒரு அச்சுறுத்தலோடு நாம் வாழவில்லை.*

*நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் எனவே நாம் அவருடன் நெருங்கி சேர முடியும் என்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடன் சாட்சி கொடுக்கிறார்.*

*எனவே நம்முள் வாழும் பரிசுத்த ஆவியானவர் நாம் தேவனுடன் நெருங்கி இருக்க அனுமதி தருகிறார்.*

*நீங்கள் உங்களுக்குள் இந்த சாதாரண கேள்வியை கேளுங்கள், நீங்கள் ஜீவனுள்ள தேவனிடம் நேரிடையாக போக முடியும் என்றால் ஏன் நீங்கள் இந்த உலகில் வேறு ஒரு நபரிடம்/ஆதாரத்திடம் செல்கிறீர்கள்?*

*நாம் எதற்காக ஜெபம் மற்றும் மற்றவர்களுக்கு ஒரு மாறாக இனொருவரை நாடுகிறோம்?*

*நாம் ஏன் அதை செய்கிறோம்?*
*ஜீவனுள்ள தேவனை இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் தொடர்புகொள்ளும் வாய்ப்பு இருக்கையில், அவரை அப்பா பிதாவே என்று கூப்பிடும் சலுகை மற்றும் நெருக்கம் இருக்கையில் ஏன் அப்படி செய்கிறோம்?*

*இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் முழுமை பெற வேண்டிய விஷயத்தில் நாம் ஏன் இயற்கையான முறையில் முழுமை பெற முயற்சிக்கிறோம்?*

*அவ்வாறு தொடர்பு கொள்ள அனுமதி இல்லாதவர்கள் தான் அப்படி செய்வார்கள்.*

*ஆனால் இப்பொழுது ஜெபத்தை தவிர வேறு ஏதாவது செய்து, தேவனோடு போராடுவதை விட வேறு வகையில் காரியங்களை பெற்றுக்கொள்ளலாம் என்ற ஆலோசனையில் நாம் சமாதானம் ஆகி விட்டோம்.*

***சங்கீதம் 16:11**, **ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு**.*

*உங்களுக்கு மகிழ்ச்சி வேண்டுமா?*
*நீங்கள் இன்பம் தேடுகிறீர்களா?*
*நீங்கள் வாழ்க்கை பாதையை நாடுகிறீர்களா?*
*நீங்கள் எப்படி வாழ வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?*
*நீங்கள் எப்படி நடக்க வேண்டும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?*
*நீங்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ விரும்புகிறீர்களா?*
*நீங்கள் வாழ்க்கையில் இன்பத்தை அறிய விரும்புகிறீர்களா?*

*நீங்கள் ஒரே இடத்தில் மட்டுமே காண்பீர்கள்! அவர் முன்னிலையில்!!*

**சங்கீதம்** *27:4,* **கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.**

*ஜெபத்தில் தாவீது கவனம் செலுத்துவதை இங்கே காணலாம். ஒரே ஒரு கோரிக்கை – கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.*

*நான் செய்ய விரும்புவது எல்லாம் தேவனின் சமூகத்தில் இருக்க வேண்டும் என்பதே.*
*இது தான் தேவனுடைய மனுஷனின் அடையாளம்.*

**சங்கீதம்** *42:1-2,* **மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.** *2.* **என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?**

*தேவனிடம் மட்டுமே எல்லா வளங்களும் உள்ளன என்பதை அறிந்த மனிதனின் அழுகை!*

*இந்த சங்கீதம் பாடுகளின் மத்தியில் எழுதப்பட்டது என்பதை காணலாம்.*
*3ஆம் வசனத்தில் இரவும் பகலும் என் கண்ணீரே எனக்கு உணவாயிற்று."*

*5ஆம் வசனத்தில் அவரின் ஆத்தும ஆழ்ந்த கலக்கத்தில் இருப்பதை காணலாம்.*
*6ஆம் வசனத்தில் அவர் சொல்கிறார் என் ஆத்துமா எனக்குள் கலங்குகிறது.*
*7ஆம் வசனத்தில் அவர் சொல்கிறார் போராட்டங்களின் அலைகள் ஏன் மேல் புரண்டுபோகிறது என்று.*
*9ஆம் வசனத்தில் தேவன் அவரை மறந்தார் போல் உள்ளது.*
*11ஆம் வசனத்தில் அவர் மீண்டும் கூறுகிறார், என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்?"*

*அவருடைய கலக்கங்களின் மத்தியில் அவர் என்ன செய்கிறார்?*
*அவர் யாரைத் தேடுகிறார்?*
*அவர் தீர்விற்காக என்ன திட்டமிடுகிறார்?*

*அவர் சொல்லுகிறார் "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.."*

***சங்கீதம் 73:25-26, பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை. 26. என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.***

*ஆசாப் என்ற இன்னோரு சங்கீதக்காரன் தேவனால் சங்கீதம் எழுதப்பயன்பட்டான், அவருடைய இருதய அழுகை "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை"*

*"**உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை**", இந்த சொற்றொடர் எனக்கு மிகவும் பிடித்தது."*

*ஆவியினாலே கிறிஸ்தவ வாழ்க்கையை ஆரம்பித்த நீங்கள் இப்பொழுது மாம்சம் மற்றும் இயற்கையின் மூலம் முடிக்க முற்ப்படுகிறீர்களா, அது முடியாது.*

*இப்பொழுது இருக்கும் சபைகளில் உள்ள எல்லா பிரச்சனைகளுக்கும் மிக பெரிய மூல காரணம் இது தான், இயற்கையில் திட்டங்களை இட்டு அதன் மூலம் முடிக்க பார்ப்பது தான்.*

*சபைக்கு உடனே எல்லாம் சரி ஆகிவிடனும், குறுகிய விடை வேண்டும், நிகழ்ச்சி, அரங்க மேடை, ஆலோசனை கோட்பாடுகள், உளவியல் ரீதியான முறைகள், இவை எல்லாமே தேவனோடு ஐக்கியப்பட்டு வாழ்வதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை.*

*என் மாம்சமும் என் இதயமும் தோல்வி பெறலாம், தேவனே என் இதயத்தின் பெலனும் என் பங்குமானவர் எப்போதுமே.*

*அது தான் ஆவிக்குரிய மனிதனின் நோக்கம்.*
*தேவனே என் இதயத்தின் பெலனானவர்.*

*தேவன் உங்களுக்கு அந்த பெலத்தை பெற்றுக்கொள்ள வாய்ப்பை கொடுத்துள்ளார், ஏனென்றால் தேவ ஆவியானவர் தேவனின் வளங்களை பெற்றுக்கொள்ளும் உரிமையை உங்களுக்கு கொடுத்து இருக்கிறார்.*

## Conclusion:

Intimacy with God gives us

- ✓ Access to Fellowship,
- ✓ Access to His resources, and
- ✓ Access to His Wisdom

**Psalms 63:1-5**,
*O God, You are my God;*
*Early will I seek You;*
*My soul thirsts for You;*
*My flesh longs for You*
*In a dry and thirsty land*
*Where there is no water.*
*2 So I have looked for You in the sanctuary,*
*To see Your power and Your glory.*
*3 Because Your lovingkindness is better than life,*
*My lips shall praise You.*
*4 Thus I will bless You while I live;*
*I will lift up my hands in Your name.*
*5 My soul shall be satisfied as with marrow and fatness,*
*And my mouth shall praise You with joyful lips.*